# தொழிலாளர் பிரச்சனைகள் தொடர்பான புதினங்கள் - ஒரு சிறப்பாய்வு

முனைவர் கி.ஜா. பிரிசில்லா
தமிழ்த்துறை.

## ஆய்வின் நோக்கம்:-

- தொழிலாளர் சந்தித்து வரும் பிரச்சனைகளை அறிமுகம் செய்தல்.
- தொழிலாளர் பிரச்சனைகள் தொடர்பான புதினங்கள் குறிப்பிடும்
- சிக்கல்களை சுட்டிக் காட்டி விளக்கங்களை தருதல்.
- தொழிலாளர் பிரச்சனைகள் தொடர்பான புதினங்கள் குறிப்பிடும்
- சிக்கல்களுக்கான தீர்வுகளை கண்டறிந்து விளங்க வைத்தல் என்பன.

## ஆய்வு சுருக்கம்:-

இவ் ஆய்வு தொழிலாளர் பிரச்சனைகள் தொடர்பான செய்திகள் மட்டுமே அழுத்த பெறுகின்றன.மக்களின் உயர்வுக்கு உழைப்பு அடிப்படையானது. ஆனால் உடலுழைப்பு சார்ந்த தொழிளாலர்கள் உழைத்தாலும் உயர்வடைவதில்லை. குறிப்பாக விவசாய தொழிலாளர்கள், சாலைத் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், கல் உடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள். இவர்களின் உழைப்பின் மூலம் முதலாளிகளுக்கு பல மடங்கு இலாபம் இருந்தாலும் அந்த தொழிலை செய்யும் தொழிலாளர்கள் சமூகத்தில் எவ்வித முன்னேற்றமும் அடைவதில்லை.ஆகவே இவ்வகை தொழிலாளர் பிரச்சனை தொடர்பான புதினங்களை அடையாளங்கண்டு, அவர்கள் பிரச்சனை தொடர்பான செய்திகளையும் உரிமைக்கானப் போராட்டங்களையும் அவற் றிர்க்கான தீர்வுகளையும் மையமிட்டு விளக்குவதாக உள்ளது.

## ஆய்வின் பயன்:-

இந்த ஆய்வின் மூலம் தொழிலாளர்களின் பிரச்சனகளையும் அவற்றின்தீர்வுக் கான வழிமுறை களையும் கண்டறிந்ததின் மூலமாக அடிமைமுறையற்ற புதியதொரு தொழிலாளர் சமூகத்தை உருவாக்க உதவும்.

## ஆய்விற்கான தீர்வுகள்:-

தகுந்த வழிகாட்டல் மற்றும் அரசியல் பின்புலன்களின் மூலம் சிக்கல்களை தீர்க்க முயலுதல் வேண்டும். வன்முறைகளை கையாளாமல் அமைதியான போராட்டங்கள் வாயிலாகவும் தனி மனித மன உறுதி மூலமும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.